සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	6	කණිතම්	කාලය நேரம் Time	2 මණි

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

பகுதி I

- **எல்லா வினாக்களுக்குமான விடைகளை இப் பத்திரத்தில் எழுதுக**
- **ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

1. ஆறு மில்லியன் இருநூற்று அறுபத்ததேழாயிரத்து எழுநூற்று முப்பத்திரண்டு என்பதை நியம வடிவில் எழுதுக

02. சுருக்குக. $2025 \div 19$

03. தரப்பட்டுள்ள உருவில் விரிகோணத்தை a எனவும் பின்வளை கோணத்தை b எனவும் குறித்துக் காட்டுக.



04. -2 இற்கும் 4 இற்கும் இடையில் உள்ள நேர் நிறை எண்கள் எத்தனை உள்ளன

05. இடைவெளிகளைப் பூர்த்தி செய்க.

$$\begin{array}{r} 1\ 5\ 7 \\ \times\ 5\ \square \\ \hline 3\ 1\ 4 \\ 7\ \square\ 5\ 0 \\ \hline 8\ 1\ 6\ 4 \end{array}$$

06. கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து மு,ப 10.25 இற்கு புறப்படும் உடரட மெனிகே புகையிரதம் பி.ப 6.12 இற்கு பதுளை புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. பயணத்திற்கு செலவாகிய காலத்தைக் காண்க.

07. கீழுள்ள எண்கோட்டின் மூலம் காட்டப்படுவது அமாயாவினதும் கமலாவினதும் தற்போதைய வயது ஆகும். இருவரும் ஒரே நாளில் பிறந்த தினத்தை கொண்டாடுகின்றனர்.



கமலாவின் பிறந்த தினம் 2019-03-03 திகதி எனின் அமாயாவின் பிறந்த நாள் எப்போதாகும்?

08. $\frac{5}{12} + \frac{1}{4}$ இனைச் சுருக்கி விடையை எளிய வடிவில் எழுதிக் காட்டுக.

Past Papers Wiki

09. வியாபாரி ஒருவரிடம் இருந்த முட்டைகளின் எண்ணிக்கையை கிட்டிய த்திற்கு மட்டந்தட்டும் போது 80 ஆகும். அதில் இரண்டு முட்டைகள் உடைந்தால் மீதமுள்ள முட்டைகளை கிட்டிய 10 ற்கு மட்டந் தட்டும் போது 70 ஆகும். அவரிடம் உள்ள முட்டைகளின் எண்ணிக்கைக்கு எடுக்க முடியுமான பெறுமானங்கள் எவையாகும்

10. சுருக்குக. $21.5 - 12.67$

11. 23, 7 இன் காரணியாகுமா ? இல்லையா ? என்பதை காரணங்களுடன் விளக்குக.

12. $40 = 5 \times \square = 5 \times \square^3$ வெற்றுப் பெட்டிக்கு பொருத்தமான பெறுமானத்தை எழுதுக

13. படத்தில் காட்டப்பட்டுள்ள முக்கோணியின்

i) சுற்றளவுக்கான அட்சர கணித கோவையை எழுதுக

ii) $x = 10$ ஆகும் போது சுற்றளவைக் காண்க



14. முக்கோண எண்ணொன்றை முக்கோண புள்ளிப் படத்தில் குறிக்கும் போது கீழுள்ள நிரலில் 6 முக்கோணிகள் உள்ளன. அது எத்தனையாவது முக்கோண எண்ணாகும் ? அதன் புள்ளி வரிப் படத்தை வரைந்து காட்டுக.

15. படத்தில் A மற்றும் B யினால் தரப்பட்டுள்ள தளவுருக்களின் பெயர்களை குறிப்பிடுக.



16. 3 : 2 இற்கு சமவலு விகிதங்கள் இரண்டு வீதம் எழுதுக.

17. தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் சரி எனும் அடையாளம் (√) பிழையாயின் பிழை எனும் அடையாளம் (×) இடுக.

ஒழுங்கான நான்முகியின் விளிம்புகளின் எண்ணிக்கையும் முகங்களின் எண்ணிக்கையும் சமனாகும் ( )

கிடைத்தளம் ஒன்றின் கிடை என்பதை மதிப்பிடுவதற்கு நீர் மட்டம் பயன்படுத்தப்படுகிறது ( )

18. 67.53 இல் 3 ஆல் வகைக் குறிக்கும் பெறுமானம் யாது

19. < அல்லது > எனும் அடையாளத்தை பயன்படுத்தி இடைவெளி நிரப்புக.

i) $\frac{48}{100}$ ..... 0.2 ii) $\frac{3}{4}$ 1

20. மனோ குறித்த எண்ணை நினைக்கின்றான் அவ்வெண் 10 ஐ விட அதிகம் 20 இனை விடக்குறைவு அவ் வெண்ணின் ஒரு காரணி 3 ஆகும். அவன் நினைத்த ஈரிலக்க எண்ணில் இரு இலக்கங்களினதும் கூட்டுத்தொகை 9 எனின், அவ் வெண்ணைக் காண்க.

பகுதி II

- முதலாம் வினா உட்பட ஏனைய 4 வினாக்களுக்கும் இவ் வினாபத்திரத்தில் விடையளிக்குக.
- முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும் மீதியுள்ள வினாக்களுக்கு 11 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்

---

01. பாடசாலையில் உள்ள கணித அறையின் சுவர் அலங்காரம் ஒன்றில் குறித்த ஒரு பகுதி படத்தில் காட்டப்பட்டுள்ளது. அப்பாடசாலையின் மாணவன் ஒருவன் 1 cm × 1cm பெட்டிகளை உபயோகித்து இதனை வடிவமைத்துள்ளான்



i) சுவர் அலங்காரத்தின் மிகச் சிறிய பெட்டியின் சுற்றளவு யாது? (1 புள்ளி)

ii) நிறந் தீட்டப்பட்ட பகுதியின் சுற்றளவைக் காண்க (2 புள்ளி)

iii) மிகச் சிறிய பெட்டியின் பரப்பளவைக் காண்க. (1 புள்ளி)

iv) நிறந் தீட்டப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க (2 புள்ளி)

v) நிறந்தீட்டப்படாத பகுதியின் பரப்பளவிற்கும் மொத்த பரப்பளவிற்கும் இடையிலான விகிதத்தை எளிய வடிவில் காட்டுக. (4 புள்ளி)

vi) நிறந் தீட்டப்பட்ட பகுதியின் பரப்பளவை மொத்த பரப்பளவின் பின்னமாக காட்டுக. (2 புள்ளி)

vii) மேலே (iv) பெற்ற விடையை தசம எண்ணாக குறித்துக் காட்டுக. (2 புள்ளி)

viii) மேழுள்ள அலங்காரத்திற்கு அமைவாக 1cm × 1 cm அளவுள்ள சிறிய பெட்டிகளைப் பயன்படுத்தி $6cm^2$ பரப்பளவுள்ள தளவுருவொன்றை எழுதிக் காட்டுக. (2 புள்ளி)

16 புள்ளிகள்

02. செவ்வகத்தின் உள்ளே தரப்பட்டுள்ள எண்களைப் பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

0.5	$\frac{3}{4}$	$\frac{1}{2}$	0.05
$\frac{1}{8}$	5.21	0.3	

i) தரப்பட்டுள்ள எல்லா எண்களையும் இரண்டு கூட்டங்களாக வகைப்படுத்தி, அவற்றின் பொது இயல்புகளின் அடிப்படையில் அவற்றைப் பெயரிடுக.

(2 புள்ளி)

....

ii) மிகப் பெரிய பின்னத்தையும் மிகச் சிறிய பின்னத்தையும் எழுதி அவற்றின் கூட்டுத்தொகையினைக் காண்க.

(3 புள்ளி)

iii) பொறுமானம் காண்க. $\frac{3}{4} - \frac{1}{2}$

(2 புள்ளி)

iv) இங்குள்ள தசம எண்களை ஏறுவரிசையில் எழுதிக் காட்டுக.

(2 புள்ளி)

v) மேழுள்ள மிகப் பெரிய தசம எண்ணை எண் சட்டத்தில் குறித்துக் காட்டுக.

(2 புள்ளி)



11 புள்ளிகள்

03. பாடசாலை மட்டக் கணிப்பீட்டில் கணிதப் பாடதில் 38 மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகள் தொடர்பான தகவல்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. அட்டவணையை அவதானித்து வெற்றிடங்களை நிரப்புக.

i)

புள்ளி	முதல் நிரலில் உள்ள மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் வரவுக் குறி	மாணவர் எண்ணிக்கை
8,9,10	𝍸 𝍸 //	.....
11,12,13	𝍸 /	.....
14,15,16	.....	7
17,18,19	.....	.....

(4 புள்ளி)

i) அட்டவணையில் உள்ள தரவுகளை படவரைபின் மூலம் காட்டுக.
(O எனும் குறியீட்டால் 4 மாணவர்களை வகைக் குறிக்கின்றன)

8,9,10	
11,12,13	
14,15,16	
17,18,19	

(4 புள்ளி)

ii) படவரைபை பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

a. 14 புள்ளிகளை விடக் குறைவாகப் பெற்ற எத்தனை மாணவர்கள் உள்ளனர்

b. அதி கூடிய மாணவர்கள் உள்ளடக்கப்படுவது எப் புள்ளிக் கூட்டத்தில் (2 புள்ளி)

(1 புள்ளி)

(11 புள்ளிகள்)

04. 3792004108 எனும் எண்ணை

i) நியம வடிவில் எழுதிக் காட்டுக. (1 புள்ளி)

ii) மேலே நியம வடிவில் எழுதப்பட்ட எண்ணை கீழே தரப்பட்டுள்ள பெட்டிகளில் பொருத்தமான முறையில் எழுதுக. (2 புள்ளி)



iii) மேலுள்ள படத்தில் உள்ள வெற்றுப் பெட்டிகளின் எண் வலயங்களை எழுதுக. (3 புள்ளி)

iv) வினா (i) இல் எழுதிய எண்ணை சொற்களில் எழுதுக. (2 புள்ளி)

v) மேலுள்ள எண்ணின் 4 ஆல் வகைக் குறிக்கும் எண் 8 ஆல் வகைக் குறிக்கும் எண்ணின் எத்தனை மடங்காகும் (3 புள்ளி)

(11 புள்ளி)

05 i) கீழுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான பெறுமானங்களை இடுக. (5 புள்ளி)

4	×	9	=	.....
3	×	5	=	.....
8	×	8	=	.....
.....	×	.....	=	29
.....	×	.....	=	81

மேலுள்ள பெட்டிகளில் உள்ள எண்களின் அடிப்படையில் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

ii) அமைக்க முடியுமான சதுர எண்கள் மற்றும் முக்கோண எண்கள் அனைத்தையும் வெவ்வேறாக எழுதுக. (2 புள்ளி)

iii) மேலுள்ள பெட்டிகளில் உள்ள எண்களை முறையாக வேறாக்கி கீழுள்ள வட்டங்களில் எழுதுக



முதன்மை எண்கள்



சேர்த்தி எண்கள் (2 புள்ளி)

iv) சுருக்காமல் கீழுள்ள கூற்றுக்களில் உள்ள விடைகள் ஒற்றையா அல்லது இரட்டையா எனக் குறிப்பிடுக.

a. 4548 – 1542 : ……..

b. 7541 × 9635 : …….. (2 புள்ளி)

(11 புள்ளி)

06) (a) பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிக்காக வருகை தந்த மாணவர்களை உபசரிப்பதற்காக பழப்பானம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது. இதற்காக கீழுள்ள பொருட்கள் சேர்க்கப்படுகிறன.

- இரண்டு லீற்றர் அளவுடை இரண்டு பழச்சாறு போத்தல்கள்
- பத்து லீற்றர் நீர்
- 100 மில்லி லீற்றர் தோடம் பழச்சாறு 03 போத்தல்கள்

i) மேழுள்ள அனைத்து பொருட்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட்ட பழப் பானத்தின் அளவை லீற்றர், மில்லி லீற்றரில் தருக (03 புள்ளி)

ii) மேழுள்ள (i) இல் உள்ளதை மில்லி லீற்றரில் தருக (1 புள்ளி)

iii) ஒருவருக்கு 190 மில்லி லீற்றர் வீதம் 75 பேரை உபசரிப்பதற்கு எவ்வளவு பழப்பானம் தேவைப்படுகிறது (2 புள்ளி)

iv) அவ்வாறு உபசரித்த பின்னர் மீதமாகவுள்ள பழப்பானத்தின் அளவைக் காண்க (2 புள்ளி)

(b) கீழுள்ள இடைவெளிகளை நிரப்புக.

i) 1 kg = 150 g + 250 g + 100 g + …….. g

ii) 1 kg = 8 × …… g (3 புள்ளி)

iii) 2 kg = 250 g × …….

(11 புள்ளி)

Past Papers Wiki

07.) (a) பாடசாலையின் வெசாக் கொண்டாட்டத்திற்காக கொண்டுவரப்பட்ட 03 தூண்களின் படம் கீழே தரப்பட்டுள்ளன.



i) M எனும் தூணின் நீளம் தெரியாததால் அதன் நீளத்தை அட்சர கணித உறுப்பொன்றில் மூலம் குறிப்பிடுக.

(1 புள்ளி)

ii) தரப்பட்டுள்ள படத்தை அவதானித்து தூண்களின் நீளங்களை ஏறுவரிசை முறையில் ஒழுங்கமைக்குக.

(1 புள்ளி)

iii) L ஐ விட தூண் M ஆனது எவ்வளவு உயரம் கூடியது (2 புள்ளி)

iv) M மற்றும் N இன் நீளங்களின் கூட்டுத்தொகை எவ்வளவு

(2 புள்ளி)

v) M என்ற தூணின் நீளம் 20 m எனின் (ii),(iv) கிடைக்கும் அட்சர கணித கோவைகளின் பெறுமானம் காண்க. (2 புள்ளி)

(b)



அரவிந்

அரவிந் புள்ளி P யில் இருந்து பயணத்தை ஆரம்பித்து அவனின் வீடு Q இனை அடைகிறான்.

i) அவன் வீட்டை அடையும் போது எத்தனை தடவைகள் வடக்குத் திசை நோக்கி பயனித்திருப்பான்?

(2 புள்ளி)

ii) அவன் A என்ற இடத்தில் இருந்து B என்ற இடத்தை நோக்கும் திசை யாது?

(2 புள்ளி)

(11 புள்ளி)

****

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank